குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 164/ 2013

அ.சா. 01

2023–ம் ஆண்டு டிசம்பர 11 –ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி –வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தர்மலிங்கம் | ஜாதி | |
| தந்தை பெயர் | பெரியண்ணன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.30 மணி,

Accused Ganesan absent. Petition U./s. 317 CrPC filed and allowed. Advocate Mr.K.sivakumar present for accused.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது செக்காரபட்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 13.04.2013 ம் தேதி சுமார் காலை 09.30 மணியளவில் முத்துநாயக்கன்பட்டி வழியாக சூரமங்கலம் ஜங்ஷனுக்கு அசோக் லேலைண்ட் லாரி உருளைக்கிழங்கு லோடு ஏற்றி கொண்டு சென்றது. மேற்படி லாரி பாகல்பட்டி ஏரிக்கரைக்கு அடுத்த வளைவில் வேகமாக சென்றதால் தலைகீழாக விழுந்தது. மேற்படி லாரியில் உருளைகிழங்கு லோடு அளவிற்கு மீறி ஏற்றப்பட்டிருந்தது.

2. அப்போது எனது கொளுந்தனார் ஜெயா என்பவரது மகன் குணா (எ) கவுதம் மற்றொரு நபரை ஏற்றி கொண்ட இருசக்கர வாகனத்தில் பாகல்பட்டி வளைவு அருகே நின்று கொண்டிருந்தார். லாரி கவிழ்ந்த போது மேற்படி நபர்கள் மீது உருளைகிழங்கு லோடு விழுந்துவிட்டது. மேற்படி சம்பவம் குறித்து எனக்கு போன் மூலம் தகவல் கூறினார்கள். நான் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று குணா என்பவரை பார்த்தேன்.

3. குணா என்பவரும், அவருடன் சென்ற ஆண் நபர் ஒருவரும்

இறந்துவிட்டதாக கூறினார்கள். விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவு எண் மற்றும் அதன் ஓட்டுனர் பற்றி எனக்கு தெரியாது. விபத்து குறித்து போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த புகார் அ.சா.ஆ.01 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

4. விபத்தில் இறந்த குணா (எ) கவுதம் மற்றும் இளங்கோ எனது உறவினர் என்றால் குணா மட்டும் தான் எனது உறவினர் மற்றொரு நபரை எனக்கு தெரியாது. விபத்து குறித்து நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரி. நான் புகார் கொடுத்த அன்று போலீசார் விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை விசாரித்தார்கள் என்றால் சரி. விபத்து ஏற்படுத்திய லாரியில் உருளைக்கிழங்கு லோடு இருந்ததாகவும், அது குணாவின் மீது விழுந்ததாகவும் புகாரில் கூறியுள்ளீர் என்றால் சரி. புகாரை நான் காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன்.

5. விபத்து குறித்து என்னிடம் தகவல் கூறியவரின் பெயர் தெரியவில்லை. சம்பவ இடம் வளைவான பகுதி என்றால் சரி. சம்பவ இடத்திற்கு அருகே பாகல்பட்டி அரசு மருத்துவமனை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மருத்துவமனை அருகே வேகத்தடை உள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் லாரி ஓட்டுனரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் விபத்தில் இறந்தவர் எனது உறவினர் என்பதாலும், நஷ்ட ஈடுபெற வேண்டும் என்பதற்காக, அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் வழக்குக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**.இல்லை.

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.45 மணி,

ஒம்/- எஸ்.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.